**தலைப்பு 297 – கம்பனிகள் பதிவாளர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் 3.2.1 மற்றும் 3.2.2 ஆம் அட்டவணைகளில் வருமானக் குறியீடுகளுக்குரித்தான 03 வருமானக் கணக்குகளும் கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் இருந்தும் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி கணக்கீட்டு உத்தியோகத்தரின் முகாமைத்துவம் மற்றும் கணக்களித்தன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளின் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரமும் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தினால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு நோக்கெல்லை

---

தலைப்பு 297 – கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு உரிய தரப்பினருக்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 அக்தோபர் 16 ஆந் திகதி கம்பனி பதிவாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும்

பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தலைப்பு 297 - கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மையினை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசின் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| **நிதிப்பிரமாணம் 128(1) கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தன்மை** | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை** | **அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு** |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் | | | |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற்கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தல். | பாதீட்டு மதிப்பீடு நடைமுறை சாத்தியமாக தயாரித்திருக்காமை | 2.1 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள கட்டணங்கள் ஆகியவற்றை அறவீடு செய்வதற்கு விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்வ தெனவும் அந்த கருமம் சாட்டப்பட்டிருந்த உத்தியோகத்தவர்களினால் நிலுவை பணம் தொடர்பாக அவற்றை அறவீடு செய்தவை விரைவு படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கட்டங்கள் தொடர்பாக குறைந்தளவு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வேறு முறையில் கட்டளையிட்டுள்ளவாறு தனக்கு அறிவிப்பதாகவும், | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவைக் கடன் மீதிகளை அறவீடு செய்தல் | 2.3 |

**நிதிப் பிரமாணம் 128(2) – அரச வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் கணக்களிப் பொறுப்பு**

---

| | | | |
|---|---|---|---|
| 128(2)(அ) | வருமானக் குறியீட்டுக்குரிய வருமான மதிப்பீடுகளில் முற்றாகவும் இயன்றளவு செம்மையாகவும் தயாரிக்கப்படுகின்றன எனவும் | எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை சேகரிக்க முடியாமல் போனமை/ சேகரிக்கக் கூடியதாக இருந்த வருமானம் அதிகரிப்பின் போது குறைவின் போது வருமான மதிப்பீட்டை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை | 2.2(இ)(ii) |
| 128(2)(ஆ) | ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் நி.பி.151 இன் பிரகாரம் ஓர் அரசிறைக் கணக்கு தயாரிக்கப்படுகின்றது என்பதையும். | வருமானக் கணக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை/ தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டமை/ முறைப்படி தயாரிக்கப்படாமை | 2.2(அ)(ii) |
| 128(2)(இ) | வருமானக் குறியீடு தொடர்பாக நிதி ஆண்டின் ஜுன் 30 ஆந் திகதியன்றும் திசெம்பர் 31 ஆந் திகதியன்றும் உள்ளவாறான அரசிறை நிலுவைகளைக் காட்டும் அரையாண்டுத் திரட்டுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பப்படுகின்றன. (இந்தத் திரட்டுக்கள் முறையே ஜுலை 31 மற்றும் ஜனவரி 31 ஆந் திகதிக்கும் முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி பெறுமாறு அனுப்பப்படல் வேண்டும். அரச நிதிக்கொள்கை திணைக்களத்துக்கும் ஒரு பிரதி அனுப்பப்படல் வேண்டும்.) | அரையாண்டு நிலுவை வருமான அறிக்கை உரிய திகதியில் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2.2(அ)(i) |

| | | | |
|---|---|---|---|
| 128(2)(ஈ) | பெறுவனவுகள், கொடுப்பனவுகள் மற்றும் வழங்கல்களுக்காக போதியளவு உள்ளக செவ்வை முறையொன்று பேணப்படுவதாக வும், அந்த முறையான செயற்பாடுகளை இடையிடையே பரிசோதனை செய்வதாகவும். | வருமானக் கணக்குகளில் குறைபாடுகள் | 2.2(அ),(ஆ),(இ)(i)(iii) |
| 128(2)(உ) | அரச வருமானங்கள் சேகரிப்பது தொடர்பாக செயற்படும் கணக்கீட்டு உத்தியோகத்தர் களுடனும் விசாரித்து அரசிற்கு வருமதியாக உள்ள நிலுவை யாகவுள்ள அரசிறையை விரைவில் சேகரிப்பதன் பொருட்டு விசேட ஒழுங்குகள் செய்யப்படுகின்றன என்பதையும்: | வருமான குறியீட்டிற்குரிய வருமானங்களை சேகரித்து நிறுவனங்களிடமிருந்து நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கோரப்பட்டிருக்கவில்லை / தகவல் கோரப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனங் களிடமிருந்து தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2.2(அ)(iv)(vii) |

## 2. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 பணிகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் வழங்கியிருந்த ஏற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த 05 வருட காலப்பகுதியில் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள், பயன்படுத்தல் மற்றும் சேமிப்பு தொடர்பான தகவல்கள் கம்பனி பதிவாளர் திணைக்களத்திற்கு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்படுத்தல் | சேமிப்பு | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| 2013 | மீண்டுவரும் | 28.55 | 26.35 | 2.20 | 7.71 |
| | மூலதன | - | - | - | - |
| | **மொத்தம்** | **28.55** | **26.35** | **2.20** | **7.71** |
| 2014 | மீண்டுவரும் | 30.30 | 27.60 | 2.70 | 8.91 |
| | மூலதன | - | - | - | - |
| | **மொத்தம்** | **30.30** | **27.60** | **2.70** | **8.91** |
| 2015 | மீண்டுவரும் | 49.20 | 47.44 | 1.76 | 3.58 |
| | மூலதன | - | - | - | - |
| | **மொத்தம்** | **49.20** | **47.44** | **1.76** | **3.58** |
| 2016 | மீண்டுவரும் | 49.82 | 47.94 | 1.88 | 3.77 |
| | மூலதன | - | - | - | - |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **மொத்தம்** | **49.82** | **47.94** | **1.88** | **3.77** |
| 2017 | மீண்டுவரும் | 53.06 | 52.95 | 0.11 | 0.21 |
| | மூலதன | - | - | - | - |
| | **மொத்தம்** | **53.06** | **52.95** | **0.11** | **0.21** |

## 2.2 மதிப்பீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம்

திணைக்களத்தினால் 2017 ஆண்டிற்கான 03 வருமான குறியீடுகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 150 மில்லியன் இற்கான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது கூட்டுத்தொகை ரூபா 232.96 மில்லியனிற்கான வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பீட்டு வருமானத்தில் 155.31 சதவீதமாகக் காணப்பட்டது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமானக் குறியீடு | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு | | | மதிப்பீட்டு வருமானத்தில் சதவீதமாக சேகரிக்கப்பட்ட வருமானம் |
|---|---|---|---|---|---|
| | | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | மிகைத்தல்/ (பற்றாக்குறை) | |
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| (1) | 20.03.02.10 | 100.00 | 200.90 | 100.90 | 200.90 |
| (2) | 20.03.02.12 | 25.00 | 31.17 | 6.17 | 124.70 |
| (3) | 10.03.07.08 | 25.00 | 0.89 | (24.11) | 3.56 |
| | மொத்தம் | 150.00 | 232.96 | 82.96 | |

மேற்கூறிய வருமானக் கணக்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

### (அ) 02.03.02.10 கொண்ட வருமானக் குறியீடு – கம்பனி பதிவாளரின் கட்டணம்

(i) நிதிப் பிரமாணம் 128(2)(ஈ) பிரகாரம் வருமானக் குறியீட்டுக்கு உரிய நிலுவை வருமானம் தொடர்பாக அரை ஆண்டு அறிக்கை தயாரித்திருக்கவில்லை.

(ii) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த வருமானக் கணக்கின் பிரகாரம் நிலுவையாக இருந்த வருடாந்த அறிக்கை வருமானம் ஏதும் காட்டப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் திணைக்களத்தில் இருந்து பெற்றிருந்த தகவல்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிதியத்திற்கு நிலுவையாக இருந்த வருமானம் ரூபா 541.21 மில்லியனாகும்.

(iii) மீளாய்வாண்டிற்கான வருடாந்த அறிக்கைகள் கோவையிடப்பட வேண்டிய 12,380 சங்கங்களில் வருடாந்த அறிக்கைகள் கோவையிடப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை 204 மாத்திரமே. அதன் காரணமாக சேகரித்திருந்த வருமானம் ரூபா 0.20 மில்லியன் தொகை அதாவது சேகரிக்கப்பட வேண்டிய வருமானத்தில் சுமார் 1.62 சதவீதம் இதுந்தது. அதன் பிரகாரம் 2017 ஆண்டிற்கான நிலுவை வருமானம் ரூபா 12.17 மில்லியனாகும். செயற்படும் சங்கங்களை இனங்கண்டு சங்கங்களில் இருந்து வருடாந்த அறிக்கை

தொடர்பாக பெற வேண்டிய வருமானம், வருமானக் கணக்கில் பெற வேண்டிய வருமானம் ஒன்றென காட்டுவதற்கு மற்றும் பெற வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) கம்பனிச் சட்டத்தின் 170(1) பிரிவின் பிரகாரம் நிதி அறிக்கைகள் பதிவு செய்யப்பட வேண்டிய கம்பனிகளின் எண்ணிக்கை 7,468 தொகை எனினும் மீளாய்வாண்டின் போது நிதி அறிக்கைகள் பதிவு செய்திருந்த 2,215 தொகையாகக் காணப்பட்டமையால் பெற்றிருந்த மொத்த வருமானம் ரூபா 4.43 மில்லியனாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்காக நிதி அறிக்கைகளுக்காக அறவிடப்படாத நிலுவை வருமானம் ரூபா 10.51 மில்லியனாகும். எனினும், கம்பனி சட்டத்தின் மேற்கூறிய பிரிவின் பிரகாரம் நிதி அறிக்கைகள் பதிவு செய்யப்படாத கம்பனிகளை இனங்கண்டு அவற்றின் நிதி அறிக்கைகளை திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான நடைமுறையொன்றினை தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(v) திணைக்களத்தினால் முறையான கணினி முறைமை ஒன்று நிறுவுவதற்காக இது வரை முடியாதிருந்த காரணத்தினால் உண்மையாகவே செயற்படும் சங்கங்களின் எண்ணிக்கை செயற்படாத கம்பனிகளின் எண்ணிக்கை, வருடாந்த நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கம்பனிகளின் எண்ணிக்கை மற்றும் சமர்ப்பித்திருந்த கம்பனிகளின் எண்ணிக்கை மற்றும் செயற்படும் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் செயற்படாத சங்கங்களின் எண்ணிக்கை தொடர்பாக சரியான எண்ணிக்கை தரவுகள் பெற்றுக்கொள்ளல், சேகரிக்கக் கூடிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக சரியாக இனங்காண்பதற்கு முடியாதிருந்தது.

**(ஆ) 10.03.07.08 கொண்ட வருமானக் குறியீடு – கம்பனிகளை பதிவு செய்யும் வரி**

சட்ட ஏற்பாடுகள் உருவாக்கி கொள்ளாமல் வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணமொன்று (Levy) அறவிடப்பட்டுள்ளது என அவதானிக்கப்படுவதுடன் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் கீழ் 15 பதவிசெய்யப்பட்ட கம்பனிகளில் இருந்து மாத்திரம் மீளாய்வாண்டின் போது அனுமதிப்பத்திரம் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. இந்த நிலைமையின் கீழ் கடந்த ஆண்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்திருந்த சுமார் 25 கம்பனிகள் அந்த பணத்தை திருப்பி தரும்படி கோரியிருந்தது.

**(இ) 20.03.02.12 கொண்ட வருமானக் குறியீடு – பொது ஒப்பந்தவேலை சட்டத்தின் பிரகாரம் அறவிடப்படும் கட்டணம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் பிரகாரம் ரூபா 05 மில்லியன் தொகையை மிகைக்கும் அனைத்து பொது ஒப்பந்தவேலைகளும் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்ததுடன், 508/7 ஆம் இலக்க 1988 இன் ஜூன் 02 திகதிய வர்த்தமானி அறிவித்தலின் படி அனைத்து பொது ஒப்பந்த உடன்படிக்கைகளும் ஒப்பந்தவேலை வழங்கப்பட்டு 60 நாட்களுக்குள் பதிவு செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக திணைக்களத்தில் போதியளவு வேலைத் திட்டமொன்று செயற்படாததுடன் சட்டத்தின் 6(1) பிரிவில் (அ) பந்தியின் பிரகாரம் முறையான பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. தெரிவுக் கணக்காய்வு பரிசோதனை ஒன்றின் படி பதிவு செய்யப்பட்ட 2176 பொது ஒப்பந்தங்களுக்கான உடன்படிக்கைகளில் 97 மாத்திரம் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 128(2)(அ) பந்தியைப் போலவே 2002 ஜூலை 17 ஆம் திகதிய 01/2002 இலக்க அரச நிதிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருமான மதிப்பீடுகள் முழுமையாகவும் முடிந்த அளவு சரியான முறையிலும் தயாரித்தல் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் முக்கிய கருமமாக இருந்த போதிலும், வருமானத் தலைப்புக்களுக்காக உள்ளவாறான வருமான மதிப்பீடு வருமானத்தில் 124.70 சதவீதமாகும்.

(iii) சட்டத்தின் பிரிவு 11(3) இன் கீழ் வழங்கப்பட்டிருந்த சான்றிதழ் ஒன்று 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அந்த சான்றிதழ் வழங்கப்பட்ட வழங்கிய சந்தர்ப்பம் முதல் ஒரு வருட காலம் விண்ணப்படுத்துவதுடன் ஒப்பந்த ஆண்டினை மிகைக்குமிடத்து உரிய கட்டணத்தை செலுத்தி வருடாந்த பதிவு செய்தலைப் புதுப்படுத்த வேண்டும். எனினும் ஒரு வருடத்தை மிகைக்கும் ஒப்பந்தவேலைகளுக்காக மீண்டும் பதிவு செய்தலை புதுப்பிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றனவா என மேற்பார்வை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள்

கம்பனி பதிவாளர் திணைக்களத்திற்கான 29701 விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 6.50 | 6.49 | 3.00 | 4.11 | 20.00 | 2.38 |

### நிலுவை கடன் மீதி அறவிடப்படாமை

ஓய்வு பெறும் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய குறைப்புக்கள் ஓய்வூதிய பணிக்கொடையில் இருந்து அறவீடு செய்வதற்காக நடைமுறை ஒன்று 2016 ஜனவரி 12 திகதிய 01/2016 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது இரண்டு உத்தியோகத்தர்களின் ரூபா 0.51 மில்லியன் கடன் மீதியை தீர்ப்பதற்காக 03 மாதங்கள் முதல் 04 மாதங்கள் வரையான காலம் கடந்திருந்தது. மேலும் வேலை இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரிடம் 05 வருடங்களை மிகைத்துள்ள 0.017 இற்கான கடன் மீதியொன்றினைத் தீர்த்திருக்கவில்லை.

**2.4 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று நிறுவியிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வாளர் உட்பட மேலும் இரண்டு உத்தியோகத்தர்கள் இருந்த போதிலும், 2009 ஜூன் 09 திகதிய டீஎம்ஏ/2009 இலக்க (1) முகாமைத்துவ திணைக்கள சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 133(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது இந்த பிரிவினால் வழங்கியிருந்த கணக்காய்வு ஐய வினாக்களின் எண்ணிக்கை மூன்று மாத்திரமே.

**2.5 மனிதவள முகாமைத்துவம்**

**இணைக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

திணைக்களத்தின் செய்பணிகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டுள்ள, உள்ளவாறான, வெற்றிட மற்றும் மிகை பதவியணி மீதான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன. மீளாய்வாண்டிற்கான கம்பனி பதிவாளர் திணைக்களத்தினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 52.71 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 15 | 10 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 107 | 76 | 31 |
| (iv) | ஆரம்ப நிலை | 29 | 29 | - |
| | மொத்தம் | 155 | 116 | 39 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) திணைக்களத்தின் பிரதான நிறைவேற்றுனர் பதவி ஒன்று ஆகிய கம்பனிகள் பதிவாளர் நாயகம் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகைமை உடைய உத்தியோகத்தர்கள் ஒருவர் தெரிவு செய்வதற்கு முடியாமல் போனமையால் 2013 ஜனவரி 25 திகதிய 12/1/1784/515/032 இலக்கம் கொண்ட அமைச்சரவை பத்திரத்தின் மூலம் கம்பனி பதிவாளர் III பதவியில் கூடியகாலம் கடமையாற்றியிருந்த உத்தியோகத்தரை கடமையை நிறைவேற்றுவதற்காக நியமனம் செய்து பதில் கடமை பதவியின் ஆரம்ப சம்பளத்தில் 1/6 படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர் 2014 பெப்ரவரி 24 திகதி கம்பனி பதிவாளர் II தரத்திற்கு பதவி உயர்வு பெற்ற இந்த உத்தியோகத்தர் பதிவாளர் நாயக பதவியின் முழுநேர பதில் கடமை அடிப்படையில் 2016 ஜனவரி 01 திகதி முதல் நியமனம் செய்து தாபனக் கோவையின் VII அத்தியாயத்தின் 12.5.3 பந்தியின் பிரகாரம் பதில் கடமை பதவியில் ஆரம்ப சம்பள படியில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(ii) கம்பனி பதிவாளர் I தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு பதவிகளில் வெற்றிடங்களுக்காக II தர பெண் உத்தியோகத்தர்கள் இருவர் கடமை நிறைவேற்றும் அடிப்படையில் நியமனம் செய்து 2015 ஜூலை மாதம் முதல் பதிவாளர் I தரத்திற்கு உரிய சம்பளத்தில் 1/6 வீதம் படி செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சிரேஷ்ட மட்டத்தில் பதவிகளுக்குரிய சட்ட உத்தியோகத்தர்கள் பதவி, உதவி/ பிரதி கம்பனி பதிவாளர் (நிருவாக) ஆகிய இரண்டு பதவிகள் மற்றும் இரண்டாம் நிலை 10 கம்பனி பரிசோகதனை உத்தியோகத்தர்களின் பதவிகளும் வெற்றிடமாக காணப்படல் திணைக்களத்தில் செயலாற்றுகையை நேரடியாக பாதிக்கப்படுகின்றது.

(இ) வருடாந்த இடமாற்றங்களுக்கு உரிய இணைந்த கோவையின் உத்தியோகத்தர்களான அரச முகாமைத்துவ சேவையை சேர்ந்த 11 உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர் சேவையை சேர்ந்த 05 உத்தியோகத்தர்கள் மற்றும் சாரதி சேவையை சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் 06 வருடங்கள் முதல் 17 வருடங்கள் வரையான காலம் இடமாற்றப்படாமல் சேவையாற்றுகின்றனர்.